கரும்பு கிடைப்பதால் குனியமுத்தூரில் ஆலையை நிறுவுவதால் இரண்டு பருவங்களிலும், அதாவது சர்க்கரை ஆண்டு பருவத்திலும் சிறப்புப் பருவத்திலும் கரும்பு கிடைக்கும். ஆனால் காரமடையில் ஒரு பருவத்தில்தான், அதாவது ஜூலை செப்டம்பர் சிறப்புப் பருவத்தில்தான் கரும்பு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

கொடிமுடிப் பகுதியில் கொண்டு வர வேண்டுமென்றால் அதைப் பற்றி பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. வி. பழனிவேலு: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பகுதியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றதா? இது என்ன ஆயிற்று, எப்போது ஆரம்பிக்கப் பட உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனிக் கேள்வி போட வேண்டும்.

* 533 வினா திரு. த. சோனையா: மாண்புமிகு தொழில் மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தில் சர்க்கரை ஆலை ஒன்று புதிதாக அமைக்க திட்டம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (ஆ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை வட்டத்தில் புதிய சர்க்கரை ஆலையொன்று அமைக்கப்படவிருக்கிறது.

Central Staff College.

*624 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether the Government are aware of the proposal of the Central Government to start a Central Staff College for Training high level functionaries of Agricultural Universities during the Fifth Plan; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) வேளாண்மைக் கல்லூரி பற்றிய விவரங்கள் மாநில அரசிடம் இல்லை.